**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 56/2023

**வா.சா.2**

**திரு. கருப்புசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். பிராமிசரி நோட் எழுதுவதற்கு உரிமம் பெறவில்லை என்றால் சரிதான். பிராமிசரி நோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. பிராமிசரி நோட் எழுதவேண்டும் என்று யார் என்னை அழைத்தது என்றால் யாரும் என்னை அழைக்கவில்லை, வாதியின் மகன் மாட்டு வியாபாரம் செய்து வருகிறார் மாடு பார்ப்பதற்காக அவரை நான் பார்க்க சென்றேன். பிராமிசரி நோட் எழுதும்போது யார் யார் உடனிருநதார்கள் என்றால் வாதி , பிரதிவாதி, வாதியின் மகன் குமார் இருந்தார். வாதியின் வீட்டிற்கு செல்லும்வரை பிரதிவாதி குணசேகரன் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிராமிசரி நோட் எழுதுவதற்கு முன்பாகவே அவர்களுக்குள் பணம் கொடுப்பது வாங்குவது பற்றி பேசி முடித்திருந்தார்கள் என்றால் இல்லை அப்போதுதான் பேசினார்கள். தரப்பினர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்றால் பிரதிவாதி குடும்ப செலவுக்காக

பணம் கேட்டார் வாதியும் பணம் தர தயாராக இருந்தார் அதைப்பற்றி பேசினார்கள். எத்தனை நாட்களுக்கு முன்பாக பணம் கேட்டார் என்றால் தெரியாது. 09-06-2022 தேதியில் நடந்த சங்கதிகள் மட்டும் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுத்த சமயத்தில் நான் அங்கு இருக்கவில்லை என்றால் இருந்தேன் எத்தனை ரூபாய் நோட்டுக்கள் கொடுக்கப்பட்டது என்றால் 500 ரூபாய் நோட்டு கட்டுகள் வைத்திருந்தார். 500 ரூபாய் நோட்டு கட்டுகள் மட்டும் தான் இருந்ததா 100, 200 ரூபாய் நோட்டு கட்டுகள் இருக்கவில்லையா என்றால் 500 ரூபாய் நோட்டு கட்டுகளை பிரதிவாதிக்கு கொடுத்தார் அதை பிரதிவாதி எண்ணிக்கொண்டார் வேறு யாரும் எண்ணவில்லை. ஏற்கனவே கைரேகை பெற்ற பிராமிசரி நோட்டை நான் பூர்த்திசெய்தேன் என்றால் இல்லை. 09-06-2022 தேதிக்கு முன்பாகவே கைரேையும், கையெழுத்தும் இருந்தது என்றால் இல்லை. வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.